**முதன்மை சார்பு நீதிமன்றம், விழுப்புரம்**

**முன்னிலை :- திருமதி. K. பாரதி, M.L.,**

**முதன்மை சார்பு நீதிபதி, விழுப்புரம்**

**2026 ம் ஆண்டு ஜுன் திங்கள் 24 ம் நாள் புதன்கிழமை**

**அசல் வழக்கு எண்.556/2021**
**(CNR.No. TNVP02-001338-2021)**

1. லட்சுமணன்
2. பாஞ்சாலி
3. ஆதிமுத்துவீரன் ...வாதிகள்

//எதிர்//

1. மன்னம்மாள் (இறந்துவிட்டார்)
2. சிவக்குமார்
3. கோபாலகிருஷ்ணன்
4. வீரமணி
5. வாமணமூர்த்தி
6. சமுத்திரவள்ளி ...பிரதிவாதிகள்

இவ்வழக்கு 24.11.2021 தேதியில் தாக்கல் செய்யப்பட்டு கடந்த **10.01.2026** தேதியில் இறுதியான விசாரணைக்காக என் முன்னர் வந்தபோது வாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.சி.கே.தேசிங்குராஜா, அவர்கள் முன்னிலையாகியும், பிரதிவாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.பி.எ.நாராயணசாமி, அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதத்தை கேட்டும், வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்தும், இதுநாள் வரையில்

இந்நீதிமன்றத்தின் பரிசீலனையில் இருந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும்..........

**தீர்ப்புரை**

இவ்வழக்கு சொத்துக்களில் வாதிகளுக்கு உண்டான 2/3 பாகத்தை பிரித்துக்கொடுக்க முதல்நிலை தீர்ப்பாணை பிறப்பிக்க வேண்டியும், பிரதிவாதிகள் வாதிகளுக்கு உண்டான பாகத்தை பிரித்துக்கொடுக்க மறுத்தால் ஆணையரை நியமித்து நில இளப்பம் கட்டி இறுதிநிலை தீர்ப்பாணை பிறப்பிக்கும்படிக்கும், (1) 1 ம் பிரதிவாதி, 2 ம் பிரதிவாதி பெயருக்கு விக்கிரவாண்டி சார்பதிவாளர் அலுவலக பதிவு ஆவண எண்.2551/2020 மூலம் 14.09.2020 ம் தேதியில் எழுதிக்கொடுத்த தானசெட்டில்மெண்ட் பத்திரம், (2) 1 ம் பிரதிவாதி, 3 ம் பிரதிவாதி பெயருக்கு விக்கிரவாண்டி சார்பதிவாளர் அலுவலக பதிவு ஆவண எண்.2552/2020 மூலம் 14.09.2020 ம் தேதியில் எழுதிக்கொடுத்த தானசெட்டில்மெண்ட் பத்திரம், (3) 1 ம் பிரதிவாதி, 4 ம் பிரதிவாதி பெயருக்கு விக்கிரவாண்டி சார்பதிவாளர் அலுவலக பதிவு ஆவண எண்.2553/2020 மூலம் 14.09.2020 ம் தேதியில் எழுதிக்கொடுத்த தானசெட்டில்மெண்ட் பத்திரம், (4) 1 ம் பிரதிவாதி, 5 ம் பிரதிவாதி பெயருக்கு விக்கிரவாண்டி சார்பதிவாளர் அலுவலகை பதிவு ஆவண எண்.2554/2020 மூலம் 14.09.2020 ம் தேதியில் எழுதிக்கொடுத்த தானசெட்டில்மெண்ட் பத்திரம், ஆகியவை சட்டப்படி இல்லா நிலையது என்று விளம்புகை செய்யக்கோரியும், மற்றும் செலவுத்தொகை கோரியும் இவ்வழக்கு தாக்கல்.

**2. வழக்குரைச்சுருக்கம் :-**

மொட்டையக் கவுண்டர் என்வருக்கு சின்னப்பாப்பாள் முதல் மனைவி. மொட்டையக்கவுண்டருக்கும், சின்னப்பாளுக்கும் ரங்கநாதன் மகன் ஆவார். சின்னப்பாப்பாள் மற்றும் ரங்கநாதன் காலமாகிவிட்டார்கள். மொட்டையக் கவுண்டர் இரண்டாவதாக அழகம்மாள் என்பவரைத் திருமணம் செய்ததில் ராமநாதன் மற்றும் லட்சுமணன் ஆகியோர் வாரிசுகளாகப் பிறந்தனர். இவர்களில் ராமநாதன் காலமாகிவிட்டார். மொட்டையக் கவுண்டர் மூன்றாவதாக முத்தம்மாள் என்பவரைத் திருமணம் செய்தததில் பற்குணன் என்பவர் வாரிசு ஆவார். பற்குணனும் காலமாகிவிட்டார். இறந்துபோன ராமநாதனுக்கு 1ம் பிரதிவாதி மனைவி ஆவார். 2 முதல் 5 வரையிலான பிரதிவாதிகள் ராமநாதனின் மக்கள். இறந்துபோன பற்குணனுக்கு 2 ம் வாதி மனைவி ஆவார். 3 ம் வாதி மகன் ஆவார். மொட்டையக் கவுண்டருக்கு தாவா 1 முதல் 5 வரையிலான சொத்துக்கள் கிரைய ஆவணங்களின் படி பாத்தியம். 6 மற்றும் 7 இன சொத்துக்கள் பட்டாப்படி பாத்தியம். மேலும் 8 முதல் 12 வரையிலான இனச் சொத்துக்களும் மொட்டையக் கவுண்டருக்கு பாத்தியப்பட்டிருந்தது. ரங்கநாதன் அவர் இறப்பதற்கு முன்பாக பாகப்பிரிவினை கோரி மொட்டையக் கவுண்டர், ராமநாதன், லட்சுமணன், பற்குணன், முத்தம்மாள், லட்சுமி அம்மாள், மண்ணம்மாள் ஆகியோர் மீது கடலூர் சார்பு நீதிமன்றத்தில் அ.வ.எண்.316/1970 என்ற வழக்கைத் தாக்கல் செய்தார். மேற்படி

வழக்கில் ஒரு பகுதியாக முதல்நிலைத் தீர்ப்பாணையானது 08.12.1975 அன்று பிறப்பிக்கப்பட்டது. மேற்படி தீர்ப்பாணையின் மீது ரங்கநாத கவுண்டர் கடலூர் கூடுதல் மாவட்ட நீதிமன்றத்தில் மே.மு.வ.எண்.366/1976 என்ற வழக்கைத் தாக்கல் செய்ததில் மேல்முறையீடானது 05.09.1980 அன்று அனுமதிக்கப்பட்டது. சொத்துகளில் பாதி பாகத்தில் ரங்கநாதனுக்கு உரிமை உள்ளது என கடலூர் மாவட்ட நீதிமன்றம் தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணை பிறப்பித்துள்ளது. மேற்படி தீர்ப்பை எதிர்த்து 1ம் பிரதிவாதி சென்னை உயர்நீதிமன்றத்தில் S.A. No.19/1981 தாக்கல் செய்ததில் 2ம் மேல்முறையீடானது தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது. ரங்கநாதன் அவருக்கு பாத்தியப்பட்ட பாதி பாக சொத்துக்களை விற்பனை செய்ய முடிவு செய்த போது ராமநாதன் மற்றும் 1ம் வாதி ஆகியோர் கூட்டுக்குடும்பமாக வாழ்ந்து வந்த நிலையில் குடும்பச் சொத்துக்களில் இருந்து வருகின்ற வருவாயை கொண்டு மேற்படி பாதி பாக சொத்துக்களை 26.07.1993 மற்றும் 09.04.1997 ஆகிய தேதிகளில் மூத்தவரான ராமநாதனின் மனைவியான 1ம் பிரதிவாதியின் பெயரில் கிரையம் வாங்கப்பட்டது. ஏற்கனவே இருந்த பாதி பாக சொத்துக்களையும் கிரையம் பெற்றுள்ள பாதி பாகச்சொத்துக்களையும் ஒன்றாகச் சேர்த்து ஒன்றாம் வாதியும், ராமநாதனும் கூட்டாக அனுபவித்து வந்தனர். 1ம் வாதி ராமநாதனிடம் பாகம் பிரித்துக்கொடுக்குமாறு கேட்டபோது ராமநாதன் காலம் கடத்தி வந்து பின்னிட்டு இறந்துவிட்டார். ராமநாதனின்

மனைவியான 1ம் பிரதிவாதி பாகம் தரமுடியாது என மறுத்துவிட்டார். 1ம் பிரதிவாதி 2, 3, 4, 5 பிரதிவாதிகளுக்கு 14.09.2020 தேதியன்று சொத்துக்களை தானசாசனம் எழுதிக்கொடுத்துள்ளார். மேற்படி தானசாசன ஆவணங்கள் சட்டப்படி செல்லாது. இதுகுறித்து 26.09.2020 அன்று விழுப்புரம் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அலுவலகத்தில் புகார் கொடுத்தபோது தானசாசன ஆவணங்களை ரத்து செய்து கொடுப்பதாகத் தெரிவித்துவிட்டு பின்னர் ரத்து செய்து கொடுக்காமல் பிரதிவாதிகள் காலம் கடத்தி வருகின்றனர். இதுகுறித்து வாதிகள் கடந்த 14.07.2021 அன்று வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பியுள்ளனர். 1 முதல் 5 பிரதிவாதிகள் வழக்கறிஞர் அறிவிப்பைப் பெற்றுக்கொண்டனர். 6 ம் பிரதிவாதி வழக்கறிஞர் அறிவிப்பைப் பெறாமல் திருப்பி அனுப்பிவிட்டார். பிரதிவாதிகள் அனைவரும் 28.07.2021 அன்று உண்மைக்கு விரோதமான சங்கதிகளைத் தெரிவித்து பதில் அறிவிப்பு அனுப்பியுள்ளனர். அதனை மறுத்து வாதிகள் 09.08.2021 அன்று ஒரு ரீஜாயின்டர் அறிவிப்பை அனுப்பியுள்ளனர். எனவே வழக்குச் சொத்துக்களில் வாதிகளுக்குரிய 2/3 பாகத்தை பிரித்துக்கொடுக்க பாகப்பிரிவினை கோரியும் 2 முதல் 5 பிரதிவாதிகள் பெயருக்கு ஏற்பட்ட தான சாசன ஆவணங்கள் சட்டப்படி இல்லா நிலையது என விளம்புகைப் பரிகாரம் கோரியும் அசல் வழக்கானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**3. 3ம் பிரதிவாதியால் தாக்கல் செய்யப்பட்டு 1, 2, 4, 5, 6 பிரதிவாதிகளால் ஏற்றுக்கொள்ளப்பட்ட எதிர்வழக்குரையின; சுருக்கம்:-**

வழக்குச்சங்கதிகள் பொய்யானது. வழக்குச்சொத்து மொட்டையக்கவுண்டரின் தனிப்பட்ட சொத்து என்பது உண்மை. ரங்கநாதன் மற்றும் பிரதிவாதிகளின் உறவுமுறையும் உண்மை. 1ம் வாதி மற்றும் பற்குணன் மொட்டையக்கவுண்டரின் சட்டப்படியான வாரிசுகள் இல்லை. அவா்களுக்கு பிரதிவாதிகளுடன் சமபாக உரிமையும் இல்லை. வழக்குச்சொத்துக்கள் பாகம் பிரியாத இந்து கூட்டுக்குடும்பத்திற்குப் பாத்தியப்பட்ட சொத்துக்கள் அல்ல. மொட்டையக்கவுண்டா் 10.04.1970 அன்று அவரது தங்கை மகளான 1ம் பிரதிவாதிக்கு தன்னுடைய சுயசம்பாத்திய சொத்துக்களில் ஏக்கா் 3/01 சொத்தை தானசாசனம் எழுதி ஒப்படைத்துவிட்டார். மீதமுள்ள சொத்துக்களை 2 முதல் 4 பிரதிவாதிகளான பேரப்பிள்ளைகள் அடைந்துகொள்ளவேண்டி 02.07.1985 ல் உயில் ஆவணம் ஏற்படுத்தியுள்ளார். சென்னை உயர்நீதிமன்றத்தில் 1ம் பிரதிவாதி தாக்கல் செய்த 2ம் மேல்முறையீட்டு வழக்கு நிலுவையில் இருந்தபோதே 1ம் பிரதிவாதியும் ரங்கநாதனும் சமாதானமாகி செட்டில்மெண்ட் சொத்தின் வருமானத்தின் மூலம் வந்த தொகையைக் கொடுத்து 1ம் பிரதிவாதி ரங்கநாதனிடம் ஏக்கர் 2/38 சொத்தை அதாவது 1/2 பாகச்சொத்தை கிரையம் வாங்கியுள்ளார். இவ்வாறாக 1ம் பிரதிவாதிக்கு வழக்குச்சொத்துக்கள் முழுவதும் தனிப்பட்டு பாத்தியப்பட்டது. மேற்படி

சொத்துக்கள் எப்போதும் கூட்டுக்குடும்ப சொத்துக்களாக இருந்தது இல்லை. 1ம் பிரதிவாதி அவரது மக்களுடன் வழக்குச்சொத்தை அனுபவித்து வந்து அடமானக்கடன் பெற்று விவசாயம் செய்து கடன்களை பைசல் செய்து வரி மற்றும் மின்கட்டணம் செலுத்தி அனுபவித்து வருகிறார். மேலும் 7வது இனச்சொத்தில் 5 எச்.பி மோட்டார் இணைப்பு மற்றும் எஸ்.சி.எண்.684 மின் இணைப்பு பெற்று அனுபவித்தும் வருகிறார். வழக்குச்சொத்தானது Women's Property Right படி 1ம் பிரதிவாதிக்குப் பாத்தியப்பட்டது ஆகும். தாவா சொத்துக்கள் சம்பந்தமாக 1ம் பிரதிவாதி அவரது விருப்பத்தின்படி தானசாசன ஆவணங்கள் ஏற்படுத்தியுள்ளார். 1ம் வாதியின் தாயார் அழகம்மாள் மொட்டையக்கவுண்டருடன் திருமண உறவின்றி சேர்ந்து வாழ்ந்து ராமநாதனை ஈன்றெடுத்தார். அதன்பிறகு அவர் மொட்டையக்கவுண்டருடன் கருத்து வேறுபாடு ஏற்பட்டு அன்னியூரைச்சேர்ந்த ரங்கநாதன் என்பவரை திருமணம் செய்து லட்சுமணன் என்ற மகனையும். குமாரி என்ற மகளையும் பெற்றெடுத்தார். ஒரே தாயாரின் பிள்ளைகள் என்ற உறவுதான் ராமநாதனுக்கும். லட்சுமணனுக்கும் இடையில் உள்ளதே தவிர மொட்டையக்கவுண்டரின் மகன் என்ற உரிமை 1ம் வாதிக்கு இல்லை. ஒருவேளை வாதிகள் கூறுவது உண்மை என்றால் 1ம் வாதியுடன் பிறந்த தங்கை இவ்வழக்கிற்கு அவசியமான தரப்பினர் ஆவார். மேலும் பற்குணனுக்கு தகப்பனார் மொட்டையக்கவுண்டர் இல்லை. மேற்படி காரணங்களால் தான்

மொட்டையக்கவுண்டரின் இறப்பிற்கு வாதிகள் யாரும் வரவில்லை. இவா்கள் எப்போதும் மொட்டையக்கவுண்டரின் வாரிசுகளாகவும். ஒரே தகப்பனின் பிள்ளைகள் என்ற உறவிலும் சேர்ந்து வாழ்ந்தது இல்லை. மன்னம்மாள் பெயருக்கு வழக்குச்சொத்துக்களின் பட்டா. சிட்டா மாறும்போதும். மின் இணைப்பு பெறும்போதும். கடன் பெறும்போதும். செட்டில்மெண்ட் ஆவணங்கள் எழுதும்போதும் உள்ளூரிலேயே இருந்து வந்த வாதிகள் அவா்களுக்கு சொத்துக்களில் எவ்வித உரிமையும் இல்லை என்பதால் தான் ஆட்சேபிக்கவில்லை. வாதிகள் மொட்டையக்கவுண்டரின் வாரிசுகள் என்பதற்கு வாரிசு சான்று இல்லாமல் வழக்கு தாக்கல் செய்துள்ளதால் வழக்கு நிலைநிற்கத்தக்கது அல்ல. மன்னம்மாளின் தனிப்பட்ட சொத்தான 10, 11, 12 இனச்சொத்துக்களில் யு.டி.ஆர் பட்டாவில் பெயர்கள் குறிப்பிட்டுள்ளதாகக் கூறி சொத்துக்களை விற்றுவிட்ட ரங்கநாதன் பெயரையும் சேர்த்து போலியாக மேற்படி சொத்துக்களை பொறுத்து பட்டா தயாா் செய்துள்ளனர். நாகப்பன் என்பவர் 12 வது இனச்சொத்தில் 25 வருடங்களுக்கு மேலாக கூரைவீடு கட்டி வாழ்ந்து வந்து தற்போது மெத்தை வீடு கட்டி அனுபவித்து வருகிறார். இவ்வாறாக வாதிகளுக்கு வழக்குச்சொத்தில் 2-3 பாக உரிமை இல்லை. வழக்குச்சொத்தில் கூட்டு பாத்தியதை இல்லாமல் வாதிகள் செலுத்தியுள்ள நீதிமன்றக்கட்டணம் தவறு. தாவா தள்ளுபடியாகவேண்டும்.

**4. மேற்படி பிராது எதிர்வழக்குரை சங்கதிகளை கருத்தில் கொண்டு கீழ்கண்ட எழுவினர்க்கள் விசாரணைக்காக வனையப்பட்டுள்ளது.**

1. Whether the 1st plaintiff and the husband of 1st defendant are related by uterine blood as stated in the written statement?

2. Whether the suit properties are separate properties of the 1st defendant?

3. Whether the plaintiffs are entitled for the relief of partition and separate Possession?

4. To what other relief?

5. இவ்வழக்கு விசாரணைக்கு இருந்த நிலையில் வாதி தரப்பில், வாதி தன்னை வா.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.39 சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டு 3ம் வாதி வா.சா.2 ஆக விசாரிக்கப்பட்டு, பின் வாதி தரப்பு சாட்சியம் முடிக்கப்பட்டது. பிரதிவாதி தரப்பில், 3ம் பிரதிவாதி பி.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு பி.சா.ஆ.1 முதல் பி.சா.ஆ.13 வரையான சான்றாவணங்கள் குறியீடு செய்ப்பட்டு பிரதிவாதிகள் தரப்பு சாட்சியம் முடிக்கப்பட்டுள்ளது.

**6. எழுவினர் 1க்கான தீர்வு:-**

6(1) மொட்டையக்கவுண்டருக்கு சின்ன பாப்பா முதல் மனைவி என்றும், அவர்களுக்கு ரங்கநாதன் என்பவர் மகன் என்றும், வழக்குரையில் உறவுமுறைகள் கூறப்பட்டுள்ளது. மேற்படி உறவுமுறைகளை பிரதிவாதிகள்

தரப்பில் மறுக்கவில்லை. மொட்டையக்கவுண்டருக்கு அழகம்மாளை இரண்டாவதாகத் திருமணம் செய்ததில் ராமநாதன் மற்றும் 1ம் வாதி லட்சுமணன் ஆகியோர் மக்கள் என்றும், மூன்றாவதாக முத்தம்மாள் என்பவரை திருமணம் செய்து வந்ததில் பற்குணன் என்பவர் வாரிசு என்றும் வழக்குரையில் உறவுமுறைகள் கூறப்பட்டுள்ளது.

6(2) மேற்படி உறவுமுறைகள் பிரதிவாதிகள் தரப்பால் மறுக்கப்பட்டுள்ளது. 1ம் வாதியின் தாயார் அழகம்மாள் மொட்டையக்கவுண்டருடன் திருமண உறவின்றி சோ'ந்து வாழ்ந்து 1ம் பிரதிவாதியின் கணவர் ராமநாதனை ஈன்றெடுத்ததாகவும், அதன்பிறகு மொட்டையக்கவுண்டருடன் கருத்துவேறுபாடு ஏற்பட்டதால் அன்னியூரைச் சேர்ந்த ரங்கநாதன் என்பவரைத் திருமணம் செய்து வந்து வாழ்ந்ததில் 1ம் வாதி லட்சுமணன் மற்றும் குமாரி என்ற பெண் ஆகியோர் வாரிசுகள் என்றும், ஒரே தாயாரின் பிள்ளைகள் என்ற உறவுமுறைதான் ராமநாதனுக்கும், 1ம் வாதிக்கும் உள்ளதே தவிர மொட்டையக்கவுண்டரின் மகன் என்ற வாரிசுரிமை 1ம் வாதிக்கு இல்லை என்றும் பிரதிவாதிகள் தரப்பில் எதிர்வாதம் செய்யப்பட்டுள்ளது. மேலும் வாதிகள் தெரிவிப்பது உண்மையென்றால் 1ம் வாதியின் தங்கை குமாரி என்பவர் வழக்கிற்கு அவசியமான தரப்பினர் என்றும், அவரை தரப்பினராக சேர்க்காததால் வழக்கானது குறையுடையது என்றும் தெரிவித்து வாதிடப்பட்டது.

6(3) மேலும் ஒரே தாயாரின் மக்கள் என்ற உறவுமுறைகூட பற்குணனுக்கு இல்லை என்றும் பிரதிவாதிகள் தரப்பில் தெரிவித்து வாதிடப்பட்டது. இவ்வாறாக 1ம் வாதி லட்சுமணன் மற்றும் 2, 3 வாதிகளின் தகப்பனார் பற்குணன் ஆகியோர் மொட்டையக்கவுண்டரின் மக்கள் அல்ல என பிரதிவாதிகள் தரப்பால் எதிர்வாதம் செய்யப்பட்டுள்ள நிலையில் வாதிகள் தரப்பில் கடலூர் சார்பு நீதிமன்றத்தில் மொட்டையக்கவுண்டரின் முதல் மனைவியின் மகனான ரங்கநாதக்கவுண்டர் தாக்கல் செய்த அ.வ.எண்.316/1970 வழக்கின் தீர்ப்புரை குறித்து சுட்டிக்காட்டி வாதிடப்பட்டது.

6(4) வா.சா.ஆ.9 கடலூர் சார்பு நீதிமன்ற அ.வ.எண்.316/1970 என்ற வழக்கின் தீர்ப்புரையைப் பரிசீலித்ததில் மேற்படி வழக்கின் வாதியான ரங்கநாதனின் வழக்குரையில் மொட்டையக்கவுண்டர் சின்னப்பாப்பா என்பவரை திருமணம் செய்ததில் ரங்கநாதக்கவுண்டர் வாரிசு என்றும், அழகம்மாள் என்பவருடன் மொட்டையக்கவுண்டர் தகாத உறவு வைத்துக்கொண்டு இருந்ததில் ராமநாதன் மற்றும் லட்சுமணன் ஆகியோர் மொட்டையக்கவுண்டருக்கு பிறந்தனர் என்றும், அதன்பிறகு அவர் அழகம்மாளை விட்டுவிட்டு பொன்னம்மாள் என்பவருடன் பழகி வந்ததாகவும், அவர்களுக்கு குழந்தைகள் எதுவும் இல்லை என்றும், அதன்பிறகு மொட்டையக்கவுண்டர் முத்தம்மாளை இரண்டாவது மனைவியாக திருமணம்

செய்து கொண்டதாகவும், அவா்களுக்கு பற்குணன் வாரிசாக பிறந்ததாகவும் தெவிக்கப்பட்டுள்ளது. மொட்டையக்கவுண்டரின் சட்டப்படியான மனைவியான சின்னபாப்பாளின் மகனான ரங்கநாதக்கவுண்டரே தனது வழக்கில் லட்சுமணன் மற்றும் பற்குணன் ஆகியோர் தனது தகப்பனார் மொட்டையக்கவுண்டருக்கு பிறந்தவர்கள் என தெரிவித்துள்ளது குறிப்பிடத்தகுந்தது. மேலும் மேற்படி வழக்கில் ராமநாதன், 1ம் வாதி லட்சுமணன், லட்சுமியம்மாள் மற்றும் 1ம் பிரதவாதி மன்னம்மாள் ஆகியோா் ஒரே வழக்கறிஞரை நியமித்து ஒன்றாக எதிா்வாதம் செய்துள்ளது குறிப்பிடத்தகுந்தது.

6(5) மேற்படி வழக்கில் கடலூர் சார்பு நீதிமன்றமானது ரங்கநாதக்கவுண்டர், மொட்டையக்கவுண்டருக்கு சின்னபாப்பாள் மூலம் பிறந்த முறைப்படியான மகன் என்றும், சின்னபாப்பாளுடனர்ன திருமணம் முறைப்படியாக ரத்து ஆகாத நிலையில் முத்தம்மாளை மொட்டையக்கவுண்டர் திருமணம் செய்து கொண்டது சட்டப்படி செல்லத்தக்கது அல்ல என்றும், ராமநாதன், லட்சுமணன் மற்றும் பற்குணன் ஆகியோர் மொட்டையக்கவுண்டரின் முறைப்படியான மக்கள் அல்ல என்றும் தீர்வு கண்டுள்ளது.

6(6) மொட்டையக்கவுண்டரின் முறைப்படியான மகனான

ரங்கநாதக்கவுண்டரே தனது வழக்கில் ராமநாதன், 1ம் வாதி லட்சுமணன், பற்குணன் ஆகியோர் மொட்டையக்கவுண்டரின் மகன்கள் என தெரிவித்துள்ள நிலையில் மேற்படி சங்கதியை பிரதிவாதிகள் தரப்பில் மறுப்பது ஏற்றுக்கொள்ளக்கூடியதாக இல்லை. மேலும் 1ம் வாதி/வா.சா.1 தன்னுடன் பிறந்த சகோதரியான குமாரி என்பவரின் தகப்பனார் பெயர் ரங்கநாதன் எனத் தெரிவித்துள்ளார். இவ்வாறான நிலையில் ராமநாதன், 1ம் வாதி லட்சுமணன், பற்குணன் மற்றும் ரங்கநாதக்கவுண்டர் ஆகியோர் மொட்டையக்கவுண்டரின் மக்கள் என மேற்படி எழுவினாவிற்கு தீர்வு காணப்படுகிறது.

7. **2 முதல் 4 எழுவினர்க்களுக்கான தீர்வு:-**

7(1) வாதிகள் தரப்பில் 1 முதல் 5 இனச்சொத்துக்கள் மொட்டையக்கவுண்டருக்கு கிரையம் மூலமாகப் பாத்தியம் என்றும், 6,7 இனச்சொத்துக்கள் மொட்டையக்கவுண்டருக்குப் பட்டா மூலம் பாத்தியம் என்றும், 8 முதல் 12 இனச்சொத்துக்களும் மொட்டையக்கவுண்டருக்குப் பாத்தியப்பட்டவை என்றும் தெரிவித்து வாதிடப்பட்டது.

7(2) வாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட வா.சா.ஆ.1 30.03.1961 தேதியிட்ட கிரைய ஆவணத்தைப் பரிசீலித்ததில் வழக்கு 1 மற்றும் 2 இனச்சொத்துக்கள் மொட்டையக்கவுண்டருக்கு கிரையம் மூலமாக பாத்தியப்பட்டது என தொியவருகிறது. வா.சா.ஆ.2 ஆன 07.12.1957 தேதியிட்ட

கிரைய ஆவணத்தைப் பரிசீலித்ததில் மொட்டையக்கவுண்டருக்கு தாவா 3ம் இனச்சொத்தானது கிரையப்படி பாத்தியம் எனத் தெரியவருகிறது. வா.சா.ஆ.3 25.07.1959 தேதியிட்ட கிரைய ஆவணத்தை பரிசீலித்ததில் தாவா 4 மற்றும் 5 இனச்சொத்துக்கள் மொட்டையக்கவுண்டருக்குப் பாத்தியம் எனத் தெரியவருகிறது. வா.சா.ஆ.4 16.11.2021 தேதியிட்ட கணினி பட்டா ஆவணத்தைப் பரிசீலித்ததில் தாவா 6 மற்றும் 7 இனச்சொத்துக்களுக்கு மொட்டையக்கவுண்டரின் பெயர் உரிமையாளர் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது தெரியவருகிறது.

7(3) வா.சா.ஆ.5 10.04.1970 தேதியிட்ட தானசெட்டில்மெண்ட் ஆவணத்தைப் பரிசீலித்ததில் மொட்டையக்கவுண்டர் 1ம் பிரதிவாதி மன்னம்மாளுக்கு தாவா 8 மற்றும் 9 இனச்சொத்துக்களை தானசாசனம் எழுதிக்கொடுத்துள்ளார் எனத் தெரியவருகிறது. மொட்டையக்கவுண்டருக்கு 1ம் பிரதிவாதி தங்கை மகள் என்று குறிப்பிட்டு தானசாசனம் எழுதிக்கொடுத்ததாக வாசகங்கள் காணப்படுகிறது.

7(4) மேலும் மேற்படி தானசாசன ஆவணத்தில் தாவா 1 மற்றும் 2 இனச்சொத்துக்களையும் மொட்டையக்கவுண்டர் 1ம் பிரதிவாதிக்கு தானசாசனம் எழுதிக்கொடுத்துள்ளதாகத் தெரியவருகிறது. வா.சா.ஆ.6 மனைவரி தோராய பட்டா ஆவணத்தைப் பரிசீலித்ததில் தாவா 10 முதல் 12

இனச்சொத்துக்கள் மொட்டையக்கவுண்டர் மக்கள் 1.ராமநாதன், 2.லட்சுமணன், 3.பற்குணன், 4.ரங்கநாதன் ஆகியோருக்கு உரிமையானதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

7(5) வா.சா.ஆ.8 மற்றும் வா.சா.ஆ.9 கடலூர் சார்பு நீதிமன்றம் அ.வ.எண்.316/1970 வழக்கில் பிறப்பித்த தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணை, வா.சா.ஆ.10 மற்றும் வா.சா.ஆ.11 கடலூர் மாவட்ட நீதிமன்றம் மே.மு.வ.எண்.366/1976 ல் பிறப்பித்த தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணை ஆகியவை பரிசீலிக்கப்பட்டது. கடலூர் சார்பு நீதிமன்றம் பாகப்பிரிவினை கோரி ரங்கநாதக்கவுண்டர் தாக்கல் செய்திருந்த அ.வ.எண்.316/1970 வழக்கில் ரங்கநாதன் பாகப்பிரிவினை கோரியிருந்த சொத்துக்களில் 1 முதல் 4 மற்றும் 11 முதல் 13 வரையிலான சொத்துக்களுக்கு மட்டும் 1/2 பங்கு பாகத்தை ரங்கநாத கவுண்டருக்கு வழங்கியிருந்த நிலையில் அவர் தாக்கல் செய்திருந்த மேல்முறையீட்டு வழக்கு 366/1976 ல் கடலூர் கூடுதல் மாவட்ட நீதிமன்றமானது அனைத்து சொத்துக்களிலும் 1/2 பங்கு பாகம் ரங்கநாதக்கவுண்டருக்கு கிடைக்கத்தக்கது என தீர்ப்பு வழங்கியுள்ளது குறிப்பிடத்தக்கது.

7(6) பிரதிவாதிகள் தரப்பில் மொட்டையக்கவுண்டர் அவரது தங்கை மகளான 1ம் பிரதிவாதி மன்னம்மாள் பெயருக்கு 10.04.1970 அன்று பி.வா.ஆ.2 செட்டில்மெண்ட் ஆவணத்தின் மூலம் சொத்துக்களை செட்டில்மெண்ட்

கொடுத்ததாகத் தெரிவித்து வாதிடப்பட்டது. மேற்படி செட்டில்மெண்ட் ஆவணத்தைப் பரிசீலித்ததில் தாவா 1, 2, 8 மற்றும் 9 இனச்சொத்துக்களை மொட்டையக்கவுண்டர் 1ம் பிரதிவாதி மன்னம்மாளுக்கு செட்டில்மெண்ட் எழுதிக்கொடுத்துள்ளது தெரியவருகிறது. 1ம் பிரதிவாதி மன்னம்மாளையும் மேற்சொன்ன கடலூர் சார்பு நீதிமன்ற வழக்கு மற்றும் மேல்முறையீட்டு வழக்கு ஆகியவற்றில் தரப்பினராகச் சேர்த்து ரங்கநாதக்கவுண்டர் பாகப்பிரிவினை வழக்கைத் தாக்கல் செய்துள்ளார் என்பது குறிப்பிடத்தகுந்தது. அவ்வாறான பாகப்பிரிவினை வழக்கில் ரங்கநாதக்கவுண்டருக்கு சரிபாதி பாத்தியம் எனத் தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தகுந்தது. எனவே மொட்டையக்கவுண்டர் எழுதி வைத்துள்ள பி.வா.சா.ஆ.2 தானசெட்டில்மெண்ட் ஆவணமானது மொட்டையக்கவுண்டரின் 1/2 பங்கு பாகத்தைப் பொறுத்து மட்டுமே செல்லக்கூடியது. அதன்படி மன்னம்மாளுக்கு 1, 2, 8, 9 இனச்சொத்துக்களில் 1/2 பங்கு பாத்தியமாகிறது.

7(7) வாதிகள் தரப்பில் ரங்கநாதனுக்கு பாத்தியப்பட்ட 1/2 பாகச்சொத்தை குடும்பத்தில் மூத்தவரான ராமநாதனின் மனைவி என்ற முறையில் 1ம் பிரதிவாதியின் பெயருக்கு குடும்பச்சொத்துக்களில் இருந்து வந்த வருமானத்தை வைத்து கிரையம் பெற்றதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. ரங்கநாதன் மன்னம்மாள் பெயருக்கு 26.07.1993 அன்று தாவா 1 மற்றும் 2 இனச்சொத்துக்களில் அவருக்கு பாத்தியப்பட்ட 1/2 பாகத்தை கிரையம்

கொடுத்துள்ளதாக பி.வா.சா.ஆ.3 கிரைய ஆவணத்தை பரிசீலித்ததில் தெரியவருகிறது. மேலும் ரங்கநாதன் மன்னம்மாள் பெயருக்கு தாவா 3 முதல் 9 வரையிலான சொத்துக்களில் அவருக்கு பாத்தியப்பட்ட 1/2 பாகத்தை பி.வா.சா.ஆ.4 09.04.1998 தேதியிட்ட கிரைய ஆவணத்தின் வாயிலாக கிரையம் கொடுத்துவிட்டதும் தெரியவருகிறது.

7(8) வாதிகள் தரப்பில் மேற்படி சொத்துக்களை மன்னம்மாள் பெயருக்கு குடும்பச்சொத்துக்களில் இருந்து வந்த வருமானத்தை வைத்துதான் கிரையம் பெறப்பட்டது என வாதிடப்பட்டது. பிரதிவாதிகள் தரப்பில் எப்போதும் பொதுக்குடும்பமாக இருக்கவில்லை எனத் தெரிவித்தும், Women's Property எனத் தெரிவித்தும் எதிர்வாதம் செய்யப்பட்டுள்ளது.

7(9) The Prohibition of Benami Property Transaction Act 1988 சட்டத்தின் படி, ஒரு தனிநபர் மற்றொரு நபரின் பெயரில் சொத்து வாங்கியதாக வழக்கில் கோரிக்கை செய்வதோ, எதிர்வாதம் செய்வதோ தடை செய்யப்பட்டுள்ளது. அதன்படி 1ம் பிரதிவாதியின் பெயரில் சொத்துக்கள் வாங்கியதாக வாதிகள் கோரியுள்ளது ஏற்கக்கூடியது அல்ல. மேலும் இந்து வாரிசுரிமைச்சட்டம் பிரிவு 14 ன்படி பெண் ஒருவரின் பெயருக்குக் கிடைக்கும் சொத்துக்கள் அவரது தனிப்பட்ட சொத்துக்களாகக் கருதப்படவேண்டும்.

7(10) இவ்வாறாக மன்னம்மாள் பெயருக்கு பி.வா.ஆ.2 மற்றும் 3 ஆவணங்கள் மூலம் கிரையம் பெறப்பட்டுள்ள சொத்துக்களானது, மன்னம்மாளின் தனிப்பட்ட சொத்துக்கள் என்று இந்நீதிமன்றம் கருதுகிறது. ஏற்கனவே விவாதித்ததன்படி 1, 2, 8, 9 இனச்சொத்துக்களில் மொட்டையக்கவுண்டர் எழுதிக்கொடுத்த பி.வா.சா.ஆ.2 தானசெட்டில்மெண்ட் ஆவணத்தின்படி 1/2 பங்கு பாகமானது மன்னம்மாளுக்கு பாத்தியப்பட்டிருந்த நிலையில் ரங்கநாதன் எழுதிக்கொடுத்த கிரைய ஆவணங்களின்படி 1, 2, 8, 9 இனச்சொத்துக்களில் 1/2 பாகமும் சேர்ந்து 1, 2, 8, 9 இனச்சொத்துக்கள் மன்னம்மாளுக்கு தனிப்பட்டு முழுப்பாத்தியமாகிறது. மேலும் பி.வா.சா.ஆ.4 கிரைய ஆவணத்தின்படி 3 முதல் 7 இனச்சொத்துக்களில் ரங்கநாதன் கொடுத்த கிரையத்தின்படி மன்னம்மாளுக்கு 1/2 பாகம் பாத்தியமாகிறது.

7(11) பிரதிவாதிகள் தரப்பில் மொட்டையக்கவுண்டர் இதர சொத்துக்களைப்பொறுத்து ஆண்வாரிசுகளான பேரன்களுக்கு உயில் ஆவணம் எழுதி பதிவு செய்து கொடுத்ததாக எதிர்வாதம் செய்யப்பட்டபோதிலும், மேற்படி உயில் ஆவணமானது இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்படாததால், மேற்படி சங்கதி நிரூபிக்கப்படவில்லை என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது. இவ்வாறான நிலையில், 3 முதல் 7 இனச்சொத்துக்களில் மொட்டையக்கவுண்டருக்குப் பாத்தியப்பட்ட சொத்துக்களைப்பொறுத்து அவரது வாரிசுகளுக்கு அதில் பாகப்பிரிவினை

கிடைக்கத்தக்கது. மேலும் 10 முதல் 12 இனச்சொத்திற்கான மனைவரி தோராயப்பட்டா ஆவணத்தின்படி மேற்படி சொத்துக்களில் ராமநாதன், லட்சுமணன், பற்குணன், ரங்கநாதன் ஆகியோருக்கு சம பங்கு பாத்தியம் உள்ளது. மொட்டையக்கவுண்டரின் மகனான ரங்கநாதக்கவுண்டர் மற்றும் அவரது தாயார் சின்னபாப்பாள் இறந்துவிட்டதாக வழக்குரையில் சொல்லப்பட்டுள்ள நிலையில் ரங்கநாதக்கவுண்டருக்கு வேறு வாரிசுகள் இல்லை என்றும், அவர் திருமணமின்றி இறந்துவிட்டதாகவும், வாதங்களின்போது பிரதிவாதிகள் தரப்பால் தெரிவிக்கப்பட்டது. மேற்படி சங்கதி வாதிகள் தரப்பால் மறுக்கப்படவில்லை. இவ்வாறான நிலையில் மொட்டையக்கவுண்டரின் மற்ற மகன்களுக்கு ரங்கநாதக்கவுண்டரின் பாகம் கிடைக்கக்கூடியது என இந்நீதிமன்றம் கருதுகின்றது.

7(12) தாவா 10 முதல் 12 இனச்சொத்துக்களில் 25 வருடமாக நாகப்பன் என்பவர் வீடு கட்டி வசித்து வருவதாக பிரதிவாதிகள் தரப்பில் எதிர்வாதம் செய்யப்பட்டுள்ளது. 1ம் வாதி தனது குறுக்கு விசாரணையில் 2, 3 வருடங்களுக்கு முன்பு நாகப்பன் வீடு கட்டியதாகத் தெரிவித்துள்ளார். எவ்வாறு இருப்பினும் 10 முதல் 12 இனச்சொத்துக்கள் மொட்டையக்கவுண்டரின் வாரிசுகள் நால்வருக்கும் பாத்தியம் என வா.சா.ஆ.6 மனைவரி தோராயப்பட்டா மூலம் நிரூபிக்கப்பட்டுள்ள நிலையில் மேற்படி சொத்தில் ராமநாதன், 1ம் வாதி லட்சுமணன், பற்குணன் ஆகியோருக்கு தலா 1/3 பங்கு பாத்தியம் என்றும்,

ராமநாதனின் 1/3 பாகம் 1 முதல் 6 பிரதிவாதிகளுக்குக் கிடைக்கத்தக்கது என்றும், பற்குணனின் 1/3 பாகம் 2 மற்றும் 3 வாதிகளுக்குக் கிடைக்கத்தக்கது என்றும் இந்நீதிமன்றம் கருதுகிறது.

7(13) 3 முதல் 7 வரையிலான இனச்சொத்துக்களில் மன்னம்மாளுக்கு தனிப்பட்டு பாத்தியப்பட்ட 1/2 பங்கு பாத்தியம் போக மீதமுள்ள மொட்டையக்கவுண்டரின் 1/2 பங்கு பாத்தியத்தில் அவரது வாரிசுகளான ராமநாதன், லட்சுமணன், பற்குணன் ஆகியோருக்கு தலா 1/3 பாகம் உள்ளது. அதாவது 3 முதல் 7 வரையிலான இனச்சொத்துக்களில் 1ம் வாதிக்கு 6/36 பங்கும், 2 மற்றும் 3 வாதிகளுக்கு பொதுவாக 6/36 பங்கும் பாத்தியம். 10 முதல் 12 இனச்சொத்துக்களில் 1ம் வாதிக்கு 1/3 பங்கும், 2 மற்றும் 3 வாதிகளுக்கு பொதுவாக 1/3 பங்கும் பாத்தியம். ஏற்கனவே 1, 2, 8, 9 இனச்சொத்துக்கள் மன்னம்மாளுக்கு தனிப்பட்டு பாத்தியம் என இந்நீதிமன்றம் முடிவு கண்டுள்ள நிலையில் மேற்படி சொத்துக்களைப்பொறுத்து வாதிகளுக்கு பாகப்பிரிவினை எதுவும் கிடைக்கத்தக்கது அல்ல. மேலும் தாவா 3 முதல் 7 மற்றும் 10 முதல் 12 இனச்சொத்துக்களில் வாதிகளின் பாகத்தைப்பொறுத்து 1ம் பிரதிவாதியானவர், 2 முதல் 5 பிரதிவாதிகளுக்கு ஏற்படுத்தியுள்ள செட்டில்மெண்ட் ஆவணங்கள் செல்லத்தக்கவை அல்ல என இந்நீதிமன்றம் எழுவினாக்கள் 2 முதல் 4க்கு முடிவு காண்கிறது.

**முடிவாக,** (1) தாவா 1, 2, 8, 9 இனச்சொத்துக்களைப்பொறுத்து இவ்வழக்கை தள்ளுபடி செய்தும்,

(2) 3 முதல் 7 வரையிலான இனச்சொத்துக்களில் 1ம் வாதிக்கு 6/36 பங்கும், 2,3 வாதிகளுக்கு பொதுவாக 6/36 பங்கும் கிடைக்கத்தக்கது என்றும்,

(3) 10 முதல் 12 வரையிலான இனச்சொத்துக்களில் 1ம் வாதிக்கு 1/3 பங்கும், 2, 3 வாதிகளுக்கு பொதுவாக 1/3 பங்கும் கிடைக்கத்தக்கது என்றும், பாகப்பிரிவினை பரிகாரம் வழங்கியும்,

(4) தாவா 3 முதல் 7 மற்றும் 10 முதல் 12 இனச்சொத்துக்களில் வாதிகளின் பாகத்தைப்பொறுத்து 1ம் பிரதிவாதியானவர், 2 முதல் 5 பிரதிவாதிகளுக்கு ஏற்படுத்தியுள்ள செட்டில்மெண்ட் ஆவணங்கள் (ஆவண எண்கள் 2551/2020, 2552/2020, 2553/2020, 2554/2020) இல்லா நிலையது என்று விளம்புகை செய்தும் தீர்ப்பளிக்கப்படுகிறது.

(5) தரப்பினர்களின் உறவுமுறை கருதி செலவுத்தொகை இல்லை.

இந்த தீர்ப்புரையானது என்னால் சுருக்கெழுத்தருக்கு நேரடியாக சொல்லப்பட்டு அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, பின்னர் என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு இத்திறந்த நீதிமன்றத்தில் 24.06.2026 ஆகிய இன்று அவையறியப் பகரப்பட்டது.

முதன்மை சார்பு நீதிபதி,
விழுப்புரம்.

**வாதிகள் தரப்பு சாட்சியங்கள்:-**

வா.சா.1 திரு. லட்சுமணன் த/பெ. மொட்டையக்கவுண்டர்

வா.சா.2 திரு. ஆதிமுத்துவீரன் த/பெ. பற்குணன்

**வாதிகள் தரப்பில் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் விபரம் :-**

| | | |
|---|---|---|
| வா.சா.ஆ 1. | 30.03.1961 | தாவா 1 மற்றும் 2-வது அயிட்ட சொத்தை மொட்டையக்கவுண்டர் கிரையம் பெற்றதற்கான ஆவணம். சான்றிட்ட நகல். |
| வா.சா.ஆ 2. | 07.12.1957 | தாவா 3-வது அயிட்ட சொத்தை மொட்டையக் கவுண்டர் கிரையம் பெற்றதற்கான ஆவணம். சான்றிட்ட நகல். |
| வா.சா.ஆ 3. | 25.07.1959 | தாவா 4 மற்றும் 5-வது அயிட்ட சொத்தை மொட்டையக்கவுண்டர் கிரையம் பெற்றதற்கான ஆவணம். சான்றிட்ட நகல். |
| வா.சா.ஆ 4. | --- | தாவா 6 மற்றும் 7 அயிட்ட சொத்துக்களுக்கான மொட்டையக்கவுண்டர் பெயரில் உள்ள பட்டா இணைய சேவை நகல் |
| வா.சா.ஆ 5. | 10.04.1970 | தாவா 8 மற்றும் 9-வது அயிட்ட சொத்தை மொட்டையக்கவுண்டர் 1-ஆம் பிரதிவாதிக்கு எழுதிவைத்த தான செட்டில்மெண்ட் ஆவணம். சான்றிட்ட நகல். |
| வா.சா.ஆ 6. | 31.03.1991 | பட்டா எண்.297-க்கான கூட்டுபட்டா அசல். |
| வா.சா.ஆ 7. | 14.07.1985 | மொட்டையக்கவுண்டர் இறப்பு சான்றிதழ் பதிவு நகல். |
| வா.சா.ஆ 8. | 08.12.1975 | கடலூர் சார்பு நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண்.316/1970-ல் பெற்ற தீர்ப்பாணை சான்றிட்ட நகல். |

| | | |
|---|---|---|
| வா.சா.ஆ 9. | 08.12.1975 | கடலூர் சார்பு நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண்.316/1970-ல் பெற்ற தீர்ப்புரை சான்றிட்ட நகல். |
| வா.சா.ஆ 10. | 05.09.1980 | கடலூர் கூடுதல் மாவட்ட நீதிமன்றத்தில் அப்பீல் வழக்கு எண்.366/1976-ல் பெற்ற தீர்ப்பாணை சான்றிட்ட நகல். |
| வா.சா.ஆ 11. | 05.09.1980 | கடலூர் கூடுதல் மாவட்ட நீதிமன்றத்தில் அப்பீல் வழக்கு எண்.366/1976-ல் பெற்ற தீர்ப்பு சான்றிட்ட நகல். |
| வா.சா.ஆ 12. | 26.07.1993 | -ஆம் பிரதிவாதி பேரில் கிரையம் பெற்ற கிரையப்பத்திரம் சான்றிட்ட நகல். |
| வா.சா.ஆ 13. | 09.04.1997 | 1-ஆம் பிரதிவாதி பேரில் பெற்ற கிரையப்பத்திரம் சான்றிட்ட நகல். |
| வா.சா.ஆ 14. | 14.09.2020 | வில்லங்க சான்றிதழ் இணைய சேவை நகல். |
| வா.சா.ஆ 15. | 14.09.2020 | 1-ஆம் பிரதிவாதி 2-ஆம் பிரதிவாதி பெயரில் எழுதிக்கொடுத்த தானசெட்டில்மெண்ட் பத்திரம் கணினி நகல். |
| வா.சா.ஆ 16. | 14.09.2020 | 1-ஆம் பிரதிவாதி 3-ஆம் பிரதிவாதி பெயரில் எழுதிக்கொடுத்த தானசெட்டில்மெண்ட் பத்திரம் கணினி நகல். |
| வா.சா.ஆ 17. | 14.09.2020 | 1-ஆம் பிரதிவாதி 4-ஆம் பிரதிவாதி பெயரில் எழுதிக்கொடுத்த தானசெட்டில்மெண்ட் பத்திரம் கணினி நகல் |
| வா.சா.ஆ 18. | 14.09.2020 | 1-ஆம் பிரதிவாதி 5-ஆம் பிரதிவாதி பெயரில் எழுதிக்கொடுத்த தானசெட்டில்மெண்ட் பத்திரம் கணினி நகல் |
| வா.சா.ஆ 19. | 26.09.2020 | 1-ஆம் வாதி, 2 மற்றும் 5 பிரதிவாதிகள் மீது விழுப்புரம் |

| | | |
|---|---|---|
| | | மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அலுவலகத்தில் கொடுத்த புகார் நகல். |
| வா.சா.ஆ 20. | 01.10.2020 | 1-ஆம் வாதி கொடுத்த புகாரின் பேரில் விழுப்புரம் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அலுவலகத்தில் நில அபகரிப்பு தடுப்பு சிறப்பு பிரிவு அலுவலகத்தில் விசாரணைக்காண அழைப்பாணை |
| வா.சா.ஆ 21. | 14.07.2021 | வாதிகள், தனது வழக்கறிஞர் மூலம் பிரதிவாதிகளுக்கு அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பு அலுவலக நகல். |
| வா.சா.ஆ 22. | 16.07.2021 | 1-ஆம் பிரதிவாதி அறிவிப்பை பெற்றுக்கொண்டதற்கான ஒப்புதல் அட்டை அசல் |
| வா.சா.ஆ 23. | 16.07.2021 | 2-ஆம் பிரதிவாதி அறிவிப்பை பெற்றுக்கொண்டதற்கான ஒப்புதல் அட்டை அசல் |
| வா.சா.ஆ 24. | 17.07.2021 | 3-ஆம் பிரதிவாதி அறிவிப்பை பெற்றுக்கொண்டதற்கான ஒப்புதல் அட்டை அசல் |
| வா.சா.ஆ 25. | 17.07.2021 | 4-ஆம் பிரதிவாதி அறிவிப்பை பெற்றுக்கொண்டதற்கான ஒப்புதல் அட்டை அசல் |
| வா.சா.ஆ 26. | 16.07.2021 | 5-ஆம் பிரதிவாதி அறிவிப்பை பெற்றுக்கொண்டதற்கான ஒப்புதல் அட்டை அசல் |
| வா.சா.ஆ 27. | 16.07.2021 | 6-ஆம் பிரதிவாதி, நோட்டீசை வாங்காமல் திருப்பி அனுப்பிய அறிவிப்பின் அஞ்சல் உறை அசல் |
| வா.சா.ஆ 28. | 28.07.2021 | பிரதிவாதிகள் அனைவரும் வழக்கறிஞர் மூலம் அனுப்பிய பதில் அறிவிப்பு அசல் |
| வா.சா.ஆ 29. | 09.08.2021 | வாதிகள் வழக்கறிஞர் பிரதிவாதிகள் வழக்கறிஞருக்கு அனுப்பிய Re Joinder Notice. |

| | | |
|---|---|---|
| வா.சா.ஆ 30. | 10.08.2021 | Re Joinder Notice. ஐ, பிரதிவாதிகள் வழக்கறிஞர் பெற்றுக் கொண்டதற்கான ஒப்புதல் அட்டை. |
| வா.சா.ஆ 31 | 03.03.1980 | காதணி விழா அழைப்பிதழ் |
| வா.சா.ஆ 32 | 18.03.1998 | ஈமக்கிரியை பத்திரிக்கை |
| வா.சா.ஆ 33 | 22.11.2007 | முத்தம்மாள் என்பவரின் வாக்காளார் அடையாள அட்டை |
| வா.சா.ஆ 34 | 21.02.2013 | ஈமக்கிரியை பத்திரிக்கை |
| வா.சா.ஆ 35 | 14.12.1953 | கருப்பாயி என்கின்ற முத்தம்மாள் பெயரில் ஏற்பட்ட போக்கியப்பத்திரம் |
| வா.சா.ஆ 36 | 03.07.1954 | முத்தம்மாள் பெயரில் ஏற்பட்ட தானசெட்டில்மெண்ட் பத்திரம் கணினி நகல் |
| வா.சா.ஆ 37 | -- | வில்லங்க சான்றதழ் வழக்கின் |
| வா.சா.ஆ 38 | -- | சென்னை உயர் நீதிமன்றத்தின் எஸ்.எ.எண்.19/1981 வழக்கின் (Grounds of Appeal) |
| வா.சா.ஆ 39 | 21.0.1988 | எஸ்.எ.எண்.19/1981 வழக்கின் தீர்ப்பு |

**பிரதிவாதிகள் தரப்பு சாட்சிகள் :-**

பி.சா.1 - திரு. கோபாலகிருஷ்ணன் த/பெ. ராமநாதன்

**பிரதிவாதிகள் தரப்பு சான்றாவணங்கள் :-**

| | | |
|---|---|---|
| பி.சா.ஆ.1 | 25.07.1959 | மொட்டையக்கவுண்டர் என்பவர் பெயரில் ஏற்பட்ட கிரையப்பத்திரம் சான்றிட்ட நகல் |
| பி.சா.ஆ.2 | 10.04.1970 | 1ம் பிரதிவாதி பெயரில் மொட்டையக்கவுண்டர் எழுதிக்கொடுத்த தானசெட்டில்மெண்ட் பத்திரம் சான்றிட்ட நகல் |

| | | |
|---|---|---|
| பி.சா.ஆ.3 | 26.07.1993 | ரங்கநாதன் என்பவர் 1ம் பிரதிவாதி பெயரில் எழுதிக்கொடுத்த கிரையப்பத்திரம் சான்றிட்ட நகல் |
| பி.சா.ஆ.4 | 09.04.1997 | ரங்கநாதன் என்பவர் 1ம் பிரதிவாதி பெயரில் எழுதிக்கொடுத்த கிரையப்பத்திரம் அசல் |
| பி.சா.ஆ.5 | 28.10.2003 | மின்கட்டண ரசீது |
| பி.சா.ஆ.6 | 23.04.2007 | தீர்வை ரசீது |
| பி.சா.ஆ.7 | 12.02.2019 | கணினி பட்டா |
| பி.சா.ஆ.8 | 23.07.2019 | கணினி பட்டா |
| பி.சா.ஆ.9 | 23.07.2019 | மொட்டையக்கவுண்டர் பெயரில் உள்ள கணினி பட்டா |
| பி.சா.ஆ.10 | 02.12.2019 | 1ம் பிரதிவாதி பெயரில் ஏற்பட்ட கணினி பட்டா |
| பி.சா.ஆ.11 | 09.02.2021 | 1ம் பிரதிவாதி செலுத்திய தீர்வை ரசீது |
| பி.சா.ஆ.12 | 30.01.2008 | 1ம் பிரதிவாதி பெயரில் உள்ள மின் கட்டண அட்டை |
| பி.சா.ஆ.13 | -- | 1ம் பிரதிவாதி பெயரில் உள்ள மின் கட்டண அட்டை |

முதன்மை சார்பு நீதிபதி,

விழுப்புரம்.